

தேனி வடக்கு மாவட்டம் கழக மூத்த முன்னோடி உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பாக 25000 ரூபாய் மருத்துவ நிதியை தேனி மக்களவை உறுப்பினரும் தேனி வடக்கு மாவட்டச் செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன் வழங்கினார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் போதைப் பழக்கமில்லாத தமிழகத்தை உருவாக்க இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

# கன்னியாகுமரி - திப்ருகார் விவேக் எக்ஸ்பிரஸ் ரெயில் ரத்து!

## தெற்கு ரெயில்வே அறிவிப்பு!

சென்னை, ஜூலை 21-

மேற்கு வங்க மாநிலம் சாலிமாரில் இருந்து ஆகஸ்டு 4-ந்தேதி மதியம் 12.10 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்டிரல் வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (22825), ஒரு மணி நேரம் தாமதமாக சென்டிரல் வந்தடையும்.

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-ஒடிசா மாநிலம் பாலசோர் ரெயில் நிலையத்தில் மேற்கொள்ள இருக்கும் பராமரிப்பு பணி காரணமாக சில ரெயில் சேவைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

விழுப்புரத்தில் இருந்து வருகிற ஆகஸ்டு 4-ந்தேதி காலை 11.05 மணிக்கு புறப்பட்டு மேற்கு வங்க மாநிலம் காரக்பூர் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலும்(வண்டி எண். 22604), மறுமார்க்கமாக காரக்பூரில் இருந்து வருகிற ஆகஸ்டு 6-ந்தேதி மதியம் 2 மணிக்கு புறப்பட்டு விழுப்புரம் வரும் எக்ஸ்பிரஸ் ரெயிலும் (22603) ரத்து செய்யப்படுகிறது.

அசாம் மாநிலம் திப்ருகாரில் இருந்து ஆகஸ்ட் 4-ந்தேதி இரவு 7 மணிக்கு புறப்பட்டு கன்னியாகுமரி வரும் விவேக் எக்ஸ்பிரஸ் ரெயிலும் (22504), மறுமார்க்கமாக கன்னியாகுமரில் இருந்து ஆகஸ்டு 7-ந்தேதி மாலை 5.25 மணிக்கு புறப்பட்டு திப்ருகார் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலும் (22503) ரத்து செய்யப்படுகிறது.

மேற்கு வங்க மாநிலம் புருலியாவில் இருந்து ஆகஸ்டு 3-ந்தேதி காலை 10 மணிக்கு புறப்பட்டு நெல்லை வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (22605), அதற்கு மாற்றாக, புருலியாவில் இருந்து ஒரு மணி நேரம் தாமதமாக காலை 11 மணிக்கு புறப்பட்டு நெல்லை வரும். மறுமார்க்கமாக, நெல்லையில் இருந்து ஆகஸ்டு 5-ந்தேதி அதிகாலை 3.15 மணிக்கு புறப்பட்டு புருலியா செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (22606), அதற்கு மாற்றாக நெல்லையில் இருந்து ஒரு மணி நேரம் 30 நிமிடம் தாமதமாக அதிகாலை 4.45 மணிக்கு புறப்பட்டு புருலியா செல்லும்.

மேற்கு வங்க மாநிலம் சாலிமாரில் இருந்து ஆகஸ்டு 4-ந்தேதி மதியம் 12.10 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்டிரல் வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (22825), ஒரு மணி நேரம் தாமதமாக சென்டிரல் வந்தடையும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் – தேனி வடக்கு மாவட்ட

# கழக மூத்த முன்னோடிக்கு ரூ.25 ஆயிரம் நிதி!

## தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழங்கினார்!

தேனி, ஜூலை. 21-

தேனி வடக்கு மாவட்டம் கழக மூத்த முன்னோடி உடல்நிலை பாதிக்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழக மூத்த முன்னோடிக்கு திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பாக 25000 ரூபாய் மருத்துவ நிதியை தேனி மக்களவை உறுப்பினரும் வடக்கு மாவட்ட செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன் வழங்கினார்.

தேனி மாவட்டம் போடி மீனாட்சிபுரம் பகுதியில் வசிக்கும் 80 வயது மதிக்கத்தக்க அப்பாஸ் என்பவர் திராவிட முன்னேற்ற கழகத்தின் மூத்த உறுப்பினர். இவர் சமீப காலமாக உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு பணம் இல்லாமல் பரிதவித்து வந்துள்ளார். அதனை அறிந்த தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஜிப்கான் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். அதனைத் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பரிந்துரையில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி அறக்கட்டளை மூலம் 25,000 ரூபாய் மருத்துவ நிதி உதவி ஒதுக்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட 25,000 ரூபாய் மருத்துவ நிதி உதவியினை தேனி மக்களவை உறுப்பினரும் தேனி வடக்கு மாவட்ட செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன் வழங்கினார்.

உடன்வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஜீப் கான் மீனாட்சி புரம் பேரூர் கழகச் செயலாளர் செல்வம் மற்றும் கழக முன்னோடிகள் நிதி உதவி பெற்ற கழக மூத்த முன்னோடி அப்பாஸ் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தனது மணமான நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - தோவாளை கிழக்கு ஒன்றியம்

# செண்பகராமன்புதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!



குமரி, ஜூலை, 21-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்குஒன்றியம், செண்பக ராமன்புதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டமானது 18.07.2026, சனிக்கிழமை அன்றுமாலை6.00மணியளவில் செண்பக ராமன்புதூர் திமுக அலுவகம் அருகில் வைத்து மாவட்ட பிரதிநிதி கல்யாணசுந்தரம் தலைமையில் ஒன்றிய செயலாளர் செல்வன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

ஆலோசனைகூட்டத்தில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் திரு.தில்லை செல்வம், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் கேட்சன், மாவட்ட துணைச் செயலாளர் பூதலிங்கம் பிள்ளை, பொதுக்குழு உறுப்பினர் ரஹ்மான், மாவட்ட பிரதிநிதி காந்தி, ஒன்றிய அவைத் தலைவர் சீனிவாசன்,துணைச்செயலாளர் ராஜாரமணன், பொருளாளர்ராஜாபாபு,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விஜய், மாவட்ட தொழி லாளர் அணி அமைப்பாளர் சங்கர், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி மணிகண்டன், தேவதாஸ் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

செண்பகராமன்புதூர் ஊராட்சி ஆதிச்சன்புதூர் பகுதியில் இயங்கி வரும் சதீஷ் நவீன அரிசி ஆலையிலிருந்து வெளி யேறும் தூசியால் அப்பகுதி மக்களுக்கு குறிப்பாக குழந்தைகள் மற்றும் வயதான முதியோர்களுக்குஆஸ்துமா உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். எனவே மாவட்ட சுகாதாரத்துறை இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களபணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காகஉழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும்மாவட்ட தி.மு.க. மற்றும் ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### மேட்டூர் அணை திறக்காததால்

# வறண்டு போன வயல்கள்; கேள்விக்குறியான சம்பா சாகுபடி!

## டெல்டா விவசாயிகள் கவலை!

நாகப்பட்டினம், ஜூலை 21-

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்காததால் பாளம், பாளமாக வெடித்து வயல்கள் வறண்டு சம்பா சாகுபடி கேள்விக் குறியானது. இதனால் டெல்டா விவசாயிகள் கவலையுடன் உள்ளனர். காவிரி டெல்டா மாவட்ட பாசனத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். ஆனால் நடப்பு ஆண்டு தமிழக அரசின் அலட்சியமான போக்கால் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

இதனால் காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் குறுவை சாகுபடி பொய்த்து போனது. அதிலும் காவிரி நீரை மட்டுமே நம்பியுள்ள கடைமடை பகுதிகளில் குறுவை சாகுபடி முற்றிலும் கேள்விக்குறியாகியுள்ளது. காவிரி டெல்டாவில் காவிரி நீரை மட்டும் நம்பி காத்திருந்த விவசாயிகளும், விவசாய கூலி தொழிலாளர்களும் வேலையில்லாமல், தங்களது குடும்பத்தை நடத்த முடியாமல் கடும் வேதனையில் உள்ளனர்.

அதேபோல் வழக்கமாக 5 லட்சம் ஏக்கரில் நடைபெறும் குறுவை சாகுபடி தமிழக அரசின் அலட்சியமான போக்கால் இலக்கை அடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கோடை மழையும் போதுமானதாக பெய்யாமல் போனதால் நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல், கீழ்வேளூர், திருப்பூண்டி, திருக்குவளை, வேதாரண்யம் உள்ளிட்ட பகுதிகளில் வயல்கள் பாளம், பாளமாக வெடித்து வறண்டு போய் உள்ளது. இதனால் விவசாயிகள் கவலையுடன் உள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையை நம்பித்தான் பணிகளை தொடங்குவோம். அதன்படி நடப்பு ஆண்டும் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் வந்து விடும் என்ற நம்பிக்கையில் நிலத்தை தயார் செய்தோம். ஆனால் தண்ணீர் வரவில்லை. இருப்பினும் இயற்கை கை கொடுக்கும் என உழவு பணிகளை தொடங்கினோம். இயற்கையும் சதி செய்து விட்டது. இதனால் எந்த ஆண்டும் இல்லாமல் இந்த ஆண்டு வயல்கள் வறண்டு பாளம் பாளமாக வெடித்து போய் உள்ளது.

இதனால் சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாக போய் விடும் என அச்சத்தில் இருக்கிறோம்ஃததால் கருகி வருகிறது. குறுவை பாதிப்பு ஏற்பட்டு குடும்பத்தை நடத்த கஷ்டப்படும் நாங்கள் சம்பா சாகுபடியை தொடங்கி அதிலும் பாதிப்பு ஏற்பட்டால் எப்படி சமாளிக்க முடியும். மேட்டூரிலிருந்து தண்ணீர் திறக்கப் படாத ஒவ்வொரு நாளும் நிலைமை மேலும் மோசமடைந்து வருகிறது.

கர்நாடகாவில் இருந்து உரிய காவிரி நீரை தமிழகத்திற்கு பெற்று தருவதற்கான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் தமிழக அரசு தீவிரம் காட்ட வேண்டும். எனவே தமிழக அரசு டெல்டாவை வறட்சி பாதித்த மாவட்டமாக உடனே அறிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், விவசாயக் கூலி தொழிலாளர்களுக்கும் தேசிய பேரிடர் நிதியில் இருந்து நிவாரணம் வழங்க வேண்டும். குறுவை சிறப்பு தொகுப்பை தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் சம்பா தொகுப்பாக மாற்றி எந்தவித பாகுபாடுமின்றி வழங்க வேண்டும்.

இவ்வாறு கூறினர்.

### போதைப்பழக்கம் இல்லாத

# தமிழ்நாட்டை உருவாக்க கையெழுத்து இயக்கம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூலை 21-

அனைத்து இந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பாக பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், போதைப்பழக்கம், சாதி மத வேறுபாடுகள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க ஒரு கோடி கையெழுத்து இயக்கம் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக செஞ்சி பகுதியில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தை அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற முன்னணி நிர்வாகி வழக்கறிஞர் ஆனந்தராஜ் தலைமையில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார் . இதில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் முருகன், திருமூர்த்தி, கணபதி, சத்யராஜ் மற்றும் தி.மு.க. பொறியாளர் அணி ரசூல் பாஷா, தொண்டரணி சோடா பாஷா உட்பட பலர் பங்கேற்றனர்.




தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம் வேல் மயில் பட்டி கிளைக் கழகச் செயலாளர் ராம வாசகம் மனைவி லெட்சுமி அவர்கள் இயற்கை எய்தினார்.அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார் ஆகியோர் ஆறுதல் கூறி ரூபாய் 10,000 ம் நிதி உதவி வழங்கினார்கள்.நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் சீனித்துரை, ரமேஷ் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ர. லோகநாதன்**

**ஜூலை 21 (2022)**



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

எழும்பூர் பகுதியில் அண்ணா படிப்பகச் செயலாளராகவும் தொடர்ந்து பகுதி பிரதிநிதி, வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

சென்னை தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராக இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**